

மெட்ரோ ரெயில் நிலையங்களில் சுற்றுச்சூழலுக்கு உகுந்த பசுமைத் தொட்டிகள் அமைக்கப்படுகின்றன. இதனை படத்தில் காணலாம்..

## மெட்ரோ நிலையங்களில்

# சுற்றுச் சூழலுக்கு உகந்த பசுமைத் தொட்டிகள்!

## புதிதாக அமைக்கப்படுகிறது!!

சென்னை, மார்ச். 05–

சென்னை மெட்ரோ ரெயில் நிலையங்களில் பல்வேறு நீடித்த சுற்றுச் சூழலுக்கு உகந்த வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் முனைப்புடன் செயல்பட்டு வரும் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், மெட்ரோ ரெயில்நிலையங்களின்நடைமேடைநிழற்பகுதியில்அதிக அளவு பிராண வாயுவை வெளியிடவும் மெட்ரோ நிலையங்களின் அழகான தோற்றத்திற்கு உயிர் ஊட்டவும் சியோபைட்ஸ் வகைத் தாவரங்களைக் கொண்ட பசுமைத்தொட்டிகளைஅமைக்க முடிவு செய்துள்ளது.

பசுமைத் தொட்டிகள்

அதன்முன்னோட்டமாக, சுற்றுச் சூழலுக்கு உகந்த பொருளால்தயாரிக்கப்பட்ட பசுமைத்தொட்டிகள்கோயம்பேடுமெட்ரோரெயில்நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளன. மணலால்நிரப்பப்பட்ட தட்டுகளில் இந்த பசுமைத் தொட்டிகள்வைக்கப்பட்டுள்ளன. இதனால்உபரிநீர்இதில் . சேகரிக்கப்பட்டு, நடைமேடையில் தண்ணீர் சிந்தாமல் பார்த்துக் கொள்ளப்படுகிறது.

ரெபிக்ஸ் எக்சல்சா பென்டான்ஸ், ஷெப்பிளரா வேரிகேட்டட் (குட்டை குடைத் தாவரம்) போன்ற அழகான உள் தாவரங்கள் / செடிகள் பசுமைத்தொட்டிகளில்நடப்பட்டுள்ளன. இதனால் கரியமில வாயு உறிஞ்சப்பட்டு மெட்ரோ நிலையங்களில் உள்ள வெளிக்காற்று சுத்தகரிக்கப்படுகிறது.

சுற்றுச்சூழல்

இத்தோடல்லாமல், நீடித்தசுற்றுச்சூழல்அமைப்பு மற்றும் பசுமைப் பகுதி, திட்ட செயல்பாட்டுப் பகுதியில் அதிக அளவுஇருக்கும் வகையில், ஒரு சுற்றுச்சூழல் போன்ற பல்வேறு புத்தாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்ந்து மாசுவைக் குறைப்பதற்கு உதவி செய்வதுடன் சுற்றுச்சூழல் பாதிப்பினையும் குறைக்கின்றது.

கோயம்பேடு மெட்ரோ ரெயில் நிலையத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள புதிய முயற்சியை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்பிரதீப்யாதவ், பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின்உயர்அலுவலர்கள் உடனிருந்தார்கள்.